**DEPOSITION OF WITNESS.**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, KARUR**

**S.C. No. 119/2025**

**PROSECUTION WITNESS No - 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | கிருபாகரன் | **Caste** | : | |
| **Father/ Husband Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of February 2026.**

**(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. பிரிவு 317 குவிமுச–ன் படி மனு தாக்கல் செய்து எதிரியின் அடையாளத்தை பற்றி ஆட்சேபனை செய்யக்கூடாது என்ற நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. அவர் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார்.)**

**முதல் விசாரணை :**

நான் கரூர் மேலப்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நிதி நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 01.11.2024 ஆம் தேதியன்று மாலை 05.15 மணியளவில் நானும் என் நண்பர் ஸ்ரீநாத்தும் திருமாநிலையூருக்கு டீ குடிக்க சென்றிருந்தோம். அங்கு பேருந்து கண்ணாடியை உடைத்து விட்டார்கள் என திருமாநிலையூர் ரவுண்டானா அருகில் காவல்துறையினர் புலன் விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது காவல்துறையினர் அங்கு இருந்து ஒரு கல்லை எடுத்தார்கள். அதை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் என் நண்பர் ஸ்ரீநாத்தும் கையெழுத்து செய்தோம். **கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். அது அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கைப்பற்றுதல் மகஜர் இதுதான். அது அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கல் எனக்கு

அடையாளம் தெரியாது. காவல்துறையினர் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஒரு பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அந்த பார்வை மகஜரில் நானும் என் நண்பர் ஸ்ரீநாத்தும் கையெழுத்து செய்தோம். பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அது அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த பார்வை மகஜர் இதுதான். அது அ.சா.ஆ ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

திருமாநிலையூரில் ரவுண்டானா அருகில் டீக்கடை எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்களும் ஸ்ரீநாத்தும் முதல் விசாரணையில் கூறியுள்ளது போல் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் காவல்துறையினர் உங்கள் முன்பு பார்வை மகஜரோ, கைப்பற்றுதல் மகஜரோ தயார் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் நிதி நிறுவனத்தில் வேலை பார்ப்பதால் காவல்துறையினர் தயவு வேண்டி இருப்பதால் நீங்கள் காவல்துறையினருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.13 17:37:54 +0000

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.